DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**OS.No. 60 /2018**

**(CNR.No: TNTH06-000072 -2018 )**

| | | | |
|---|---|---|---|
| Name | : **முருகன்** | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **DW2** | |

---

நாள் :18.01.2024

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1)** நீதிமன்ற ஆணையர்தாவா சொத்தை பார்வையிட்டபோது நான் உடனிருந்தேனா என்றால் இல்லை. எனது சார்பாக நீதிமன்ற ஆணையார் தாவா சொத்தை பார்வையிட்டபோது யார் உடனிருந்தார் என்றால் எனது அண்ணன் சேகர் உடனிருந்தார். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை பார்த்து விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். ஆட்சேபனையும் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்ததாக கூறும் ஆட்சேபனை தனியாக தாக்கல் செய்தேனா, அல்லது 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து தாக்கல் செய்தேனா என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியவில்லை, எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் தாக்கல் செய்ததாக கூறும் ஆட்சேபனையில் நான் கையெழுத்து எதுவும் செய்தேனா என்றால் இல்லை.

2) ஆணையர் அறிக்கைக்கு குறிப்பாக என்ன ஆட்சேபனை தெரிவித்தேன் என்றால் எனது இடம் கிழமேல் 18 அடி, தென்வடல் 41 அடியாகும். அதில் நான் தென்வடல் 36 அடிக்கு மட்டும் கட்டிடம் கட்டியுள்ளேன். மீத இடத்தை தெருவிற்காக விட்டுள்ளேன். இதுபற்றி எனது ஆட்சேபனையில் கூறியுள்ளேன்.

ஏற்கனவே எனது குறுக்கு விசாரணையில் எனது இடத்திற்கு தெற்குபக்கமுள்ள சந்தின் அகலம் 11 அடி என்று கூறியுள்ளேன் என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. நான் கூறுவது போல் எனது இடத்தில் 5 அடி தெருவிற்காக விட்டிருந்தால் தெற்குபக்க சந்தின் அகலம் 16 அடி இருக்கவேண்டும் என்றும், ஆனால் ஸ்தலத்தில் 11 அடி மட்டுமே சந்தின் அகலம் உள்ளது என்றும்,. எனவே நான் எனது இடத்தில் 5 அடி தெருவிற்காக விட்டுள்ளதால் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் நான் கிழமேல் 19 அடி அளவிலும்,. எனது சகோதரர் கிழமேல் 18.4 அடி அளவிலும், வீடு கட்டியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3) நான் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தை பார்க்காமல் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கறிஞர் சொல்லி ஆணையர் அறிக்கை வரைபடம் பற்றி தெரிந்து கொண்டு ஆட்சேபனை தாக்கல் செய்தேன். எனக்கும், எனது சகோதரருக்கும் சேர்த்து எங்கள் இடத்தில் மொத்த கிழமேல அளவு என்ன என்றால் 36 அடி ஆகும். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின் படி நான் ஒரு அடி அளவிலும், எனது சகோதரர் 0.4 அடி அளவிலும் கூடுதலான நிலத்தில் கட்டிடம் கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் எனது வீட்டின் மேற்கு பக்க சுவரில் எத்தனை ஜன்னல் வைத்துள்ளேன் என்றால் கீழ்தளத்தில் இரண்டு ஜன்னலும், முதல் மாடியில் இரண்டு ஜன்னலும் வைத்துள்ளேன். மேற்படி நான்கு ஜன்னலிலும் சன்சைடு வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன்.

4) எவ்வளவு அகலத்தில் சன்சைடு வைத்துள்ளேன் என்றால் சுமார் 1/2 அடி அகலத்தில் வைத்துள்ளேன். நான் எனது வீட்டின் மேற்கு பக்கம் ஜன்னல் வைத்துள்ள சுவருக்கு மேற்கே 3 அடி தூரத்தில் எவ்வளவு உயரத்தில் சுவர் கட்டியுள்ளேன் என்றால் சுமார் 11 முதல் 12 அடி உயரம் கட்டியுள்ளேன். மேற்படி சுவர் கட்டியுள்ள இடத்தில் ஏற்கனவே இருந்த சுவர் எனது தகப்பனாரும், வாதி தரப்பினரும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி பொது சுவராக இருந்தது, நான் வீடு கட்டும் போது அந்த சுவரை பொது சுவராகவே வைத்துக்கொள்ளாமல் என்று

வாதிகளிடம் கேட்டேன். அதற்கு வாதி தரப்பினர் வாய்மொழியாக ஒப்புக்கொண்டநிலையில் நான் ஆவணம் எழுதி கையெழுத்துக்காக கொடுத்தபோது வாதிகள் கையெழுத்து செய்யாமல் காலம் கடத்தினார்கள்,. அதனால் 2 அடி இடம் விட்டு எனது இடத்திலேயே எனது வீட்டை கட்டிக்கொண்டேன்.

5) பொது சுவர் அகற்றப்பட்டதால் வாதி வீட்டு மண் சுவர் இடிந்து விழும் நிலையில் இருந்தது. அது குறித்தும் வாதிகளிடம் நான் பேசியபோது வாதி எவ்வித உடன்பாட்டிற்கும் முன் வரவில்லை. பின்னர் வாதி காவல்நிலையில் புகார் கொடுத்தார். காவல்துறையினர் என்னை அழைத்து விசாரித்து அதே இடத்தில் சுவர் கட்டிக்கொடுக்கும்படி கூறினார்கள். அதன்படி நான் அந்த சுவரை கட்டிக்கொடுத்தேன். இந்த விபரங்கள் எதையும் நான் எனது எதிர்வழக்குரையில் கூறிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனது வீடு கிழமேல் 19 அடியும், அதற்கு மேற்கே 3 அடியும் சேர்த்து மொத்தம் 22 அடி அளவிற்கு நான் இடத்தை அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு மேற்குபக்கமுள்ள சந்திற்கு வடக்கு பக்கம் செல்லமுடியாதபடி அடைப்பாக சுவர் கட்டியும்., தெற்குபக்கம் கேட்டும் வைத்துள்ளேன் என்றால் கேட் எதுவும் வைக்கவில்லை.

6) வடக்கு பக்கம் ஏற்கனவே இருந்த அமைப்பில் சுவர் கட்டியுள்ளேன். நான் எனது கிழமேல் அளவிற்கும் கூடுதலாக எனது வீட்டிற்கு மேற்குப்பக்கம் 3 அடி அகலத்திலும், 38 அடி நீளத்திலும் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பு கட்டிடப்பகுதியையும், சன்சைடு பகுதியையும் அகற்ற கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பதிவு ஆவணங்களின் அளவிற்கும், நான்கு மால் விபரத்திற்கும் மாறுபட்டு நான் எனது எதிர்வழக்குரை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதனால் வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நானும், எனது சகோதரரும் சின்னமனூர் நகராட்சியில் கட்டிட அனுமதி பெற்றதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை

செய்யவில்லை என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

(ஓ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.